# தமிழ் நாடு சீர்மரபினர் நலவாரியத்தின் பல்வேறு நல உதவிகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிகாட்டி நெறிகள்.

அரசாணை ( நிலை) எண். 13, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 20.4.2007–ன்படி சீர்மரபினர் சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென சீர்மரபினர் நல வாரியம் அமைக்கப்பட்டது. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், திரு. பெ. மின்னல் கொடி அவர்களைத் துணைத் தலைவராகவும், அரசு சார் உறுப்பினர்களாக 7 பேர்களும் அலுவல் சாரா உறுப்பினர்களாக 13 பேர்களையும் கொண்டு சீர்மரபினர் நல வாரியம் இயங்கி வருகிறது.

அரசாணை ( நிலை) எண். 29, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 28.3.2008–ன் படி சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு. அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்குவதற்கான வழிமுறைகள் குறித்த அரசாணை வெளியிடப்பட்டது.

1) தமிழ்நாடு சீர்மரபினர் நலவாரியத்தில் பதிவுத்தகுதி பெறுபவர்களுக்கான நிதியுதவித்திட்டம் 28.3.08 முதல் நடைமுறைக்கு வருகிறது.

2) இத்திட்டம் தமிழ் நாடு முழுவதற்கும் பொருந்தும்.

3) இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் அமைப்பு சாரா தொழில் நிலமற்ற விவசாய கூலி போன்ற உடல் உழைப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர்கள் பயன் பெறத் தகுதியுடையவராவர்.

4) பதிவு பெற்ற உடல் உறுப்பினர் இறப்பின், அவரைச் சார்ந்தவர்கள் என்ற பட்டியலில் மனைவி அல்லது கணவன் (ii) பிள்ளைகள் (iii) விதவை மற்றும் முன்னரே இறந்து விட்ட காலமான மகளின் பிள்ளைகள் (iv) பெற்றோர்கள் ஆகியோர் அடங்குவர்.

5) குடும்பம் என்பதில், ஆண் உறுப்பினராக இருப்பின் அவரது மனைவி, திருமணமான அல்லது திருமணமாகாத அவரது பிள்ளைகள், சார்ந்திருக்கும் பெற்றோர், விதவையான மருமகள், இறந்த மகளின் பிள்ளைகள் ஆகியோர் அடங்குவர்.

6) பெண் உறுப்பினராக இருப்பின், அவரது கணவர், பிள்ளைகள், சார்ந்துள்ள பெற்றோர் விதவை மருமகள், உறுப்பினரின் இறந்த மகனின் பிள்ளைகள் ஆகியோர் குடும்பம் என்ற வரைமுறையில் அடங்குவர்.

7) 18 வயது நிறைவு செய்து 60 வயதுக்குட்பட்ட அமைப்பு சாரா தொழில் மற்றும் விவசாயக் கூலித் தொழிலில் ஈடுபட்டுள்ள சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர் இந்நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு பெறத்தகுதியுடையவராவர்.

## உறுப்பினர் பதிவுக்கு எவ்வாறு விண்ணப்பிப்பது

சீர்மரபினர் நலவாரியத்தில் உறுப்பினர் பதிவுக்கான விண்ணப்பத்தினை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடமிருந்து பெறலாம் .விண்ணப்பிப்பவர், இந்நல வாரிய உறுப்பினராக பதிவு பெறத் தகுதியுடைய சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர் என்பதற்கான சான்றிதழை கிராம நிர்வாகஅலுவலரிடம் பெற்று பூர்த்தி செய்த விண்ணபத்தினை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலஅலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும். இவ்விண்ணப்பங்களை சரிபார்த்து, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலஅலுவலர் உறுப்பினர்–செயலருக்கு அனுப்பி பதிவு செய்து அடையாள அட்டையை பெற்று உறுப்பினருக்கு வழங்குவர்.

இவ்வாறு பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் நலத்திட்ட உதவிகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் தகுந்த சான்றுகளுடன் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவ்விண்ணப்பங்களை சரிபார்த்து தமது பரிந்துரைகளுடன் உறுப்பினர்–செயலருக்கு அனுப்பி ஒப்புதல் பெற்று தகுதியான உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபன்மையினர் நல அலுவலர் வழங்குவர். வேறு ஏதாவது நல வாரியங்கள் மூலம் நலத்திட்ட உதவிகள் பெறுபவர்கள் இவ்வாரியம் மூலம் மீண்டும் அதே நல உதவித் திட்டங்களை பெறத் தகுதியற்றவராவார்.

ii) சீர்மரபினர் வாரியத்தில் நிதியுதவி பெறுவதற்கு உறுப்பினராக பதிவு செய்வதற்கு இத்துடன் இணைக்கப்பட்ட படிவம் I ஐ பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அலுவலரிடம் சம்ர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன், வேலையில் இருப்பவர் என்பதற்கான சான்றிதழை கீழ்க்கண்ட நபர்கள் அல்லது குறிப்பிட்ட அலுவலரிடமிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

அ) அமைப்பு சாரா தொழிலாளரை வேலைக்கு அமர்ததியவர்

ஆ) பதிவு பெற்ற தொழிற்சங்கத்தின் தலைவர், அல்லது பொதுச் செயலர் அல்லது அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட தொழிற்சங்க அலுவலர்.

இ) தொழிலாளர் நலத் துறை உதவி ஆய்வாளர் அல்லது தொழிற்சாலைகள் துறையின் ஆய்வாளர் /உதவி ஆய்வாளரின் சான்றிதழ்.

9) இத்திட்டத்தின் கீழ் உறுப்பினர்கள் பதிவுகாணும் 2 ஆண்டுகளுக்கு செல்லத்தக்கது.

10) பதிவு பெற்ற உறுப்பினருக்கும் ஓர் அடையாள அட்டை இலவசமாக வாரியத்தால் வழங்கப்படும்.

11) அடையாள அட்டையை இழந்துவிட்டால் ரூ. 20/– செலுத்தி மாற்று அடையாள அட்டை பெற்றுக் கொள்ளலாம்.

12) (1) பதிவுபெற்ற உறுப்பினர் இறப்பின் அவரது குடும்பத்திற்குச் சேர வேண்டிய நிதியுதவியைப் பெறுவதற்கு நியமனதாரரின் பெயர், முகவரி மற்றும் உறவு ஆகிய விவரங்களை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடவேண்டும். நிதியுதவியைப் பெறுவதற்கு நியமனதாரரை நியமிக்கும் பொழுது உறுப்பினரின் குடும்பத்தைச் சார்ந்த ஒருவரையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவரையோ நியமனதாரராக நியமிக்க வேண்டும். குடும்ப உறுப்பினர் அல்லாதவரை நியமனதாராக நியமனம் செய்வது செல்லாது.

(2) நியமனதாரரை நியமிக்கும் பொழுது உறுப்பினருக்குக் குடும்பம் இல்லையெனில், நியமிப்பளராக யாரை வேண்டுமாலும் நியமிக்கலாம்.

(3) நியமனதாரரை நியமித்த பின் உறுப்பினருக்குக் குடும்பம் ஏற்பட்டால், ஏற்கனவே அளித்த நியமனம் உடனடியாகச் செல்லத் தகாததாகிவிடும். குடும்பம் ஏற்பட்டபின் 90 நாட்களுக்குள் குடும்ப உறுப்பினர் ஒருவரையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவரையோ நியமித்தல் வேண்டும்.

(4) பதிவு பெற்ற உறுப்பினர் இறப்பதற்குமுன் நியமிப்பாளர் இறக்கும் பட்சத்தில் நியமிப்பாளரின் உரிமை உறுப்பினருக்கு மீள வரும். அவர் புதிதாக வேறு குடும்ப உறுப்பினரை நியமனம் செய்யவேண்டும்.

<u>தற்காலிகமாக உறுப்பினர் நீக்கம் அல்லது இரத்து செய்தல்</u>

பதிவு பெற்ற **<u>உறுப்பினர்</u>** தவறான தகவல்கள் கொடுத்தோ , விதிகளுக்கு அல்லது உரிய சட்டத்திற்குப் புறம்பாகவோ நிதியுதவி பெற்றுள்ளார் எனத் தெரியவரின், விசாரணை முடியும் வரை, அவரது உறுப்பினர் நிலை தற்காலிமாக நீக்க மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அதிகாரம் பெற்ற அலுவலர் ஆவார்.

**<u>உறுப்பினர்</u>** , தவறான தகவல்கள் கொடுத்தது, விதிகளை அல்லது உரியசட்டத்தை மீறியுள்ளது விசாரணையில் தெரியவந்தால் அவரது உறுப்பினர் நிலை இரத்து செய்யப்படும். உறுப்பினர் இரத்து செய்வதற்கு முன் உறுப்பினருக்குப் போதிய வாய்ப்புகள் அளிக்கப்படும்.

இரத்து செய்யப்பட்ட உறுப்பினருக்கு மேல்முறையீடு வாய்ப்பு அளிக்கப்படும், உறுப்பினர் இரத்து ஆணைபிறப்பிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யப்படவேண்டும் உரிய முகாந்திரங்களிருப்பின் 30 நாட்களுக்கு மேற்படி ஆனால் 90 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்ய வாய்ப்பு அளிக்கப்படும் மேல்முறையீடு (உறுப்பினர்–செயலர்) அலுவலரின் உத்தரவே இறுதியானது.

உறுப்பினர் பதிவைப் புதுப்பித்தல்

1. 2 ஆண்டுகள் முடிவடையும் தருவாயில் உறுப்பினர் பதிவைப் புதுப்பிக்க வேண்டும்.

2. உரிய காலக் கெடுவுக்குள் புதுப்பிக்கத் தவறினால், உறுப்பினர் தகுதியை இழப்பர்.உறுப்பினர் தகுதி இழப்புப் பற்றி தனியே உத்திரவு பிறப்பிக்கப்படமாட்டது. உறுப்பினர் தகுதி இழந்தவர் வாரியத்தால் அதிகாரமளிக்கப்படும் அலுவலர் மூலம் மீண்டும் உறுப்பினராகப் பதிவு பெறலாம். மீண்டும் உறுப்பினராகப் பதிவு பெற்றாலும் அவர் உறுப்பினர் தகுதி இழந்த காலத்தில் கிடைக்கவேண்டிய நிதியுதவி பெறத் தகுதியற்றவர் ஆவார்

முதியோர் ஓய்வூதியத் திட்டம்

1. தகுதி–

ஒவ்வொரு பதிவு பெற்ற உறுப்பினருக்கும் 5 ஆண்டுகள் தொடர்ந்து தொழிலாளராக வேலை செய்து 60 வயது பூர்த்தி செய்திருந்தால் முதியோர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர். வாரியத்திடம் 5 ஆண்டுகள் தொடர்ந்து பதிவு பெற்றிருப்பின், 60 வயது பூர்த்தியடைவில்லை யெனிலும் நோயின் காரணமாக வேலை செய்ய இயலாத நிலையிலிருப்பவர் மற்றும் சாதாரண வேலை செய்ய உடல் தகுதி பெறாத நிலையிலிருப்பவர் ஆகியோருக்கு முதியோர் ஓய்வூதியம் பெறத் தகுதியுண்டு.

2. ஓய்வூதியம் கோருதல்

ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய ஒவ்வொரு பதிவு பெற்ற உறுப்பினரும் உரிய படிவத்தில்மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு வாரியத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

வேலை செய்ய உடல் தகுதியற்று, முதியோர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய உறுப்பினர் சிவில் சர்ஜன் நிலைக்கும் குறையாத மருத்துவ அலுவலரின் சான்றுடன் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

முதியோர் ஓய்வூதியம் கோரும் ஒவ்வொரு விண்ணப்பத்தையும் ஆய்வு செய்து விதிகளுக்குப்பட்டு கோரிக்கையை எற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கவோ செய்யலாம். வாரியத்தின் முடிவே இறுதியானது.

முதியோர் ஓய்வூதியத் தொகை (மாதந்தோறும்) ரூ.400/– ஆகும்.

ஈமச்சடங்கு உதவித் தொகை

பதிவு பெற்ற **உறுப்பினர்** இறப்பின் ( மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்) இறந்த தொழிலாளரின் நியமினதாரருக்கு ஈமச்சடங்கு செலவுகளுக்காக ரூ 2000/– ஒப்பளிப்பு செய்வார்.

ஈமச்சடங்குக்கு உதவித் தொகை கோரும் உரிய விண்ணப்பத்துடன் உறுப்பினர் இறப்புப் பதிவு சான்றிதழ் மற்றும் வாரியத்தால் வழங்கப்பட்ட அசல் அடையாள அட்டை ஆகிய வற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

இயற்கை மரண உதவித் தொகை

பதிவு பெற்ற உறுப்பினர் இயற்கை மரணம் எய்தினால் நியமனதாரருக்கு ரூ. 15000/– உதவித் தொகை வழங்கப்படும்.

இவ்வுதவித் தொகை கோரும் விண்ணப்பத்துடன் இறப்புப் பதிவு சான்றிதழ் மற்றும் அசல் அடையாள அட்டை ஆகியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

<u>கல்வி உதவித் தொகை</u>

1. 10 ஆம் வகுப்பு படித்து வரும் உறுளப்பினரின் மகளுக்கு ஆண்டுக்கு ரூ. 1000/– கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.

2 .உறுப்பினரின் மகள் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் ரூ. 1000/– கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

3. 11 ஆம் வகுப்பு படித்து வரும் உறுப்பினரின் மகளின் கல்வி உதவித் தொகையாக ரூ. 1000/– வழங்கப்படும்.

4. 12 ஆம் வகுப்பு படித்து வரும் உறுப்பினரின் மகளுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ 1500/– வழங்கப்படும்.

5. உறுப்பினரின் மகன் அல்லது மகள் + 2 தேர்ச்சி பெற்றால் உதவித் தொகையாக ரூ. 1500/– வழங்கப்படும்.

6. முறையான பட்டப்படிப்பு பயிலும் உறுப்பினரின் மகன் அல்லது மகளுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டுக்கும் உதவித் தொகையாக ரூ. 1500/– வழங்கப்படும்.

7. விடுதியில் தங்கிப் படித்தால் உதவித் தொகை ரூ. 1750/– என உயர்த்தி வழங்கப்படும்.

8. விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் முறையாக முதுகலை பட்டப்படிப்பு படித்தால் ஒவ்வொரு கல்வியாண்டுக்கும் ரூ. 2000/– வழங்கப்படும் விடுதியில் தங்கிப் படித்தால் உதவித் தொகை ரூ. 3000/– என உயர்த்தி வழங்கப்படும்.

9. உறுப்பினரின் மகன் அல்லது மகள் சட்டம், பொறியியல், கால் நடை மருத்துவ அறிவியல் அல்லது தொழில் முறைசார்பான தொழிற் கல்வி பயிலும் மாணவருக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டுக்கும் உதவித் தொகை ரூ. 2000/– வழங்கப்படும். அம் மாணவர் விடுதியில் தங்கிப் பயின்றால் அவ்வுதவித் தொகை ரூ. 4000/– என உயர்த்தி வழங்கப்படும்.

10. விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் முதுகலை தொழிற்படிப்பு படித்தால் ஒவ்வொரு கல்வி ஆண்டுக்கும் கல்வி உதவித் தொகையாக ரூ. 4000/– வழங்கப்படும் அவர் விடுதியில் தங்கிப் படித்தால் அத்தொகை ரூ. 6000/– ஆக உயர்த்தி வழங்கப்படும்.

11. விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் தொழிற் பயிற்சி நிலையம் அல்லது பாலிடெக்னிக்கில் பயின்றால் ஒவ்வொரு கல்வி ஆண்டுக்கும் கல்வி உதவித் தொகையாக ரூ. 1000/– வழங்கப்படும். அவர் விடுதியில் தங்கிப் பயின்றால் ரூ. 1200/– என உயர்த்தி வழங்கப்படும்.

12. கல்வி உதவித் தொகை கீழ்க் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

i) பதிவு செய்யப்பட்ட உறுப்பினரின் 2 குழந்தைகளுக்கு மட்டும் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

ii) கணவன் மற்றும் மனைவி கல்வி உதவித்தொகை கோரி விண்ணப்பித்திருந்தால் இருவரில் ஒருவருக்கு மட்டும் கல்வி உதவித்தொகை வழங்கப் படும்.

iii) மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் உறுப்பினரின் மகன்/மகள் நலத்துறையில் வழங்கப்படும் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழும் உதவித்தொகை பெறத் தகுதியுடையவராக இருப்பின், ஏதாவது ஒரு திட்டத்தின் கீழ் மட்டுமே உதவித்தொகை பெறத் தகுதியுடையவர் ஆவார்.

## திருமண உதவித் தொகை

பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது அவரது மகன் அல்லது மகள் திருமணச் செலவிற்கு விண்ணப்பம் செய்தால் உதவித் தொகையாக ரூ. 2000/— வழங்கப்படும்.

இவ்வுதவித் தொகை கீழ்க் காணும் நிபந்தனைகளப் பூர்த்தி செய்ய வேண்டும்.

இவ்வுதவித் தொகை பதிவு பெற்ற உறுப்பினரின் குடும்பத்திற்கு 2 முறை மட்டும் வழங்கப்படும்.

திருமணச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட வயதை பூர்த்தி செய்தவராக இருக்க வேண்டும்.

உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்

மகன் அல்லது மகள் திருமண உதவித் தொகை கோரி கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரும் விண்ணப்பித்திருந்தால் இருவரில் ஒருவருக்கு மட்டும் உதவித் தொகை வழங்கப்படும்.

## மகப்பேறு / கருக்கலைப்பு / கருச்சிதைவு / உதவித் தொகை

பதிவு பெற்ற பெண் உறுப்பினருக்கு கீழ் வரும் உதவித் தொகை வழங்கப்படும்.

i) மகப்பேறு – ரூ. 6000/— (மாதம் ரூ. 1000/— வீதம் 6 மாதங்களுக்கு)

ii) கருச்சிதைவு – ரூ. 3000/—

iii) கருக்கலைப்பு – ரூ. 3000/—

கீழ் வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும்.

மருத்துவர் சான்று பெறப்பட வேண்டும்.

பதிவு பெற்ற பெண் உறுப்பினர் 2 முறை மட்டும் இவ்வுதவித் தொகை பெறலாம்.

பதிவு பெற்ற பெண் உறுப்பினருக்கு ஏற்கனவே 2 பிள்ளைகள் இருப்பின் இவ்வுதவித் தொகை பெறத் தகுதியற்றவராவர்.

## கண்கண்ணாடி வாங்குவதற்கு உதவித் தொகை

பதிவு பெற்ற உறுப்பினர் கண் கண்ணாடி வாங்குவதற்கான செலவை ஈடுகட்டுவதற்கு ரூ. 500/—க்கு மேற்படாமல் உதவித் தொகை வழங்கப்படும்.

இவ்வுதவித் தொகை கீழ்வரும் நிபந்தனைகளுக்குப்பட்டு வழங்கப்படும்.

பதிவு பெற்ற உறுப்பினருக்கு ஒரே ஒரு முறை தான் இவ்வுதவித் தொகை வழங்கப்படும்.

**விபத்தால் மரணம் அல்லது விபத்தினால் உடல் ஊனம் ஆகியவற்றுக்கு நிவாரணம் அளித்தல்**

பதிவு பெற்ற உறுப்பினருக்கு விபத்து ஏற்படின் விபத்து நிவாரணம் பெறத் தகுதிடையவராவர்.

**விளக்கம்**

விபத்து என்ற வரம்பின்கீழ் வேலை செய்யும் காலத்தில் அல்லது வேலையின் மூலமாக மரணம் உடல் உறுப்பு இழப்பு அல்லது உடல் உறுப்பு துண்டிக்கப்படுதல் அல்லது உடல் காயம், கண்பார்வை இழப்பு ஆகியவை அடங்கும்.

சுயமாக வேண்டுமென்றே ஏற்படுத்திக் கொண்ட உடல் காயம், தற்கொலை, தற்கொலைமுயற்சி, குடிபோதையால் அல்லது மருந்து மூலம் ஏற்படுத்திய காயம் அல்லது சட்டத்திற்கும் விதிமுறைகளுக்கும் புறம்பாக செயல்பட்டதால் ஏற்பட்ட மரணம் அல்லது உடல் உறுப்பு இழப்பு ஆகியவை விபத்து என்ற வரன்முறையில் வாராது.

உரிய சான்றுகள் சம்ர்ப்பிக்கப்பட வேண்டும்

விபத்தால் ஏற்பட்ட இறப்பு அல்லது பல்வகையான உடல் உறுப்பு இழப்பு ஆகியவற்றுக்கு கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்ட தொகை வழங்கப்படும்.

(அ) இறப்பு ரூ. 1,00,000

(ஆ) பின்வரும் உறுப்புகளை இழத்தல் மற்றும் முழுவதும் அல்லது சரிசெய்ய இயலாத அளவுக்கு உறுப்புகளை இழத்தல்

(i) இரு கைகள் அல்லது )
(ii) இரு கால்கள் அல்லது )
(iii) ஒரு கை மற்றும் ஒரு கால் அல்லது ) ரூ.1,00,000
(iv) இரு விழிகளிலும் முழுவதும் சரி செய்ய இயலாத )
அளவிற்கு பார்வை இழப்பு )

(இ) பின்வரும் உறுப்புகளை இழத்தல் அல்லது முழுவதும் மற்றும் சரி செய்ய இயலாத அளவுக்கு உறுப்புகளை இழத்தல்

1. ஒரு கை அல்லது )
2. ஒரு கால் அல்லது )
3. ஒரு கண் முழுவதும் சரிசெய்ய இயலாத ) ரூ. 50,000
அளவுக்கு பார்வை இழத்தல் )

(ஈ) மேலே இனங்கள் (ஆ) மற்றும் (இ) ல் )
குறிப்பிடப்பட்ட காயங்கள் தவிர, ஏனைய ) ரூ. 25,000
காயங்களினால் நிரந்தரமாக முழு ஏலாமை )
ஏற்பட்டதற்கு )

(உ) இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின் நெடும்பத்தி (1) இல் குறிப்பிட்டவாறு ஓரளவு நிரந்தர ஏலாமை ஏற்பட்டதற்கு

பின்வரும் அட்டவணையின் நெடும் பத்தி (2) லுள்ள நிகரான பதிலில் குறிப்பிடப்பட்டுள்ள வீதத்தில்

**அட்டவணை**

| ஏலாமையின் தன்மை | இழப்பீடு (சதவீதத்தில்) ரூ. 1,00,000–ல் கணக்கிடப்பட வேண்டியது | சதவீதம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. கால் விரல்கள் இழப்பு | அனைத்தும் | 20 |
| | கால் பெருவிரலில் இரு தனி எலும்புகள் | 5 |
| | கால் பெருவிரலில் ஒரு தனி எலும்பு | 2 |
| | கால் பெருவிரல் தவிர ஒன்றுக்கு மேற்பட்ட கால் விரல்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தனி எலும்பு | 1 |
| 2. கேட்கும் திறன் இழப்பு | இரு காதுகள் | 50 |
| 3. கேட்கும் திறன் இழப்பு | ஒரு காது | 15 |
| 4. ஒரு கையில் 4 விரல்கள் மற்றும் பெருவிரல் இழப்பு | | 40 |
| 5. நான்கு விரல்கள் இழப்பு | | 35 |
| 6. பெருவிரல் இழப்பு | பெருவிரலின் இருதனி எலும்புகள் | 25 |
| 7 கட்டுவிரல் இழப்பு | மூன்று தனி எலும்புகள் | 10 |
| | இரு தனி எலும்புகள் | 8 |
| | ஒரு தனி எலும்பு | 4 |
| 8. நடுவிரல் இழப்பு | மூன்று தனி எலும்புகள் | 6 |
| | இரு தனி எலும்புகள் | 4 |
| | ஒரு தனி எலும்பு | 2 |
| 9. மோதிரவிரல் இழப்பு | மூன்று தனி எலும்புகள் | 5 |
| | இரு தனி எலும்புகள் | 4 |
| | ஒரு தனி எலும்பு | 2 |
| 10. சுண்டுவிரல் இழப்பு | மூன்று தனி எலும்புகள் | 4 |
| | இரு தனி எலும்புகள் | 3 |
| | ஒரு தனி எலும்பு | 2 |

11. மணிக்கட்டிற்கும்
விரல்களுக்கும் (கூடுதல்) 3
இடைப்பட்ட
உள்ளங்கைப்பகுதிஇழப்பு

முதலாவது அல்லது
இரண்டாவது (கூடுதல்) 2

மூன்றாவது,
நான்காவது அல்லது
ஐந்தாவது (கூடுதல்)

12. வேறு ஏதேனும் நிலையான
ஓரளவு ஏலாமை மருத்துவர் மதிப்பிட்ட படியான சதவீதம்.

**நிவாரணத் தொகை கேட்பு**

வேலையின் காரணமாக ஏற்பட்ட விபத்தால் இறப்பு அல்லது உடல் உறுப்பு இழப்பு கண்பார்வை இழப்பு போன்றவற்றை வேலையளிப்பவர் வாரியத்திடமும் உரிய காவல் நிலையத்திலும் குறித்து காயமுற்ற தொழிலாளி அல்லது இறந்துபோன தொழிலாளியின் நியமிப்பாளரோ அல்லது சம்பந்தப்பட்ட தொழிலகத்தின் தொழிற் சங்க பிரதி நிதியோ வாரியத்திற்கு தெரியப்படுத்தலாம். விபத்து குறித்து அறிவிப்பு பெற்றவுடன் அவ்விபத்து குறித்து விசாரணை செய்யப்படும்.

உடல் காயம், உடல் உறுப்புகள் இழப்பு அல்லது கண் பார்வை இழப்பு குறித்து நிவாரணம் கோரி பதிவு பெற்ற உறுப்பினர் விண்ணப்பம் செய்யவேண்டும். இறப்பு நிகழ்வுக்கு நிவாரணத் தொகை கோரி நியமனர்கள் விண்ணப்பம் செய்யவேண்டும்.

பதிவு பெற்ற உறுப்பினர் இறப்பு நிகழ்வு நிவாரணம் கோரும் விண்ணப்பத்துடன் உரிய அலுவலர்களிடமிருந்து பெற்ற இறப்புப் பதிவு சான்றிதழ், இறந்த உடல் பரிசோதனை சான்றிதழ் ஆகியவற்றை இணைக்க வேண்டும்.

இறந்த உடல் பதிசோதனை சான்றிதழ் பெற 30 நாட்களுக்கு மேல் தாமதமானால் வட்டாட்சியரிடமிருந்து சான்றிதழ் பெற்று அனுப்பலாம்.

உடல் உறுப்புகள் இழப்பு அல்லது கண் பார்வை இழப்பு அல்லது பகுதி உடல் ஊனம் ஆகியவற்றுக்கு உதவி குடிமை அறுவை சிகிச்சை நிபுணரிடமிருந்து மருத்துவச் சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

உதவித் தொகை கோரும் கோரிக்கையை உரியவாறு சரிபார்த்தபின் வாரியம் அல்லது வாரியத்தால் அதிகாரமளிக்கப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் உரிய உதவித் தொகையை ஒப்பளிப்பு செய்வார்.

சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர் சேர்க்கைக்குரிய விண்ணப்பப்படிவம், உறுப்பினர் அடையாள அட்டை மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

1. சீர்மரபினர் நல வாரிய உறுப்பினராகச் சேருவதற் குரிய விண்ணப்பப் படிவம்.
2. சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர் அடையாள அட்டை
3. சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த உறுப்பினர் விபத்தினால் இறப்பு அல்லது ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப உதவித்தொகை கோரும் விண்ணப்பப்படிவம்.
4. சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த உறுப்பினர் இயற்கை மரணம்/ ஈமச்சடங்கு உதவித்தொகை பெற விண்ணப்பப்படிவம்.
5. சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த உறுப்பினரின் மகள் 10 ஆம் வகுப்பு/12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கான கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பப்படிவம்.
6. சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த உறுப்பினரின் மகள் 10 ஆம் வகுப்பு/11 ஆம் வகுப்பு/12 ஆம் வகுப்பு பயில்வதற்கு கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பப் படிவம்.
7. சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த உறுப்பினரின் மகன்/மகள் முறையான பட்டப்படிப்பு/ பட்ட மேற்படிப்பு/தொழிற்கல்வி/தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு/ஐ.டி.ஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பிற்கு கல்வி உதவித்தொகை விண்ணப்பப் படிவம்.
8. சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த உறுப்பினர்/உறுப்பினரின் குடும்ப உறுப்பினர் திருமண உதவித்தொகை விண்ணப்பப்படிவம்
9. சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த உறுப்பினரின் மனைவி/குடும்பப்பெண் உறுப்பினரின் பிரசவ காலம் அல்லது குறைபிரசவம்/கருக்கலைப்புக்கான நிதியுதவி பெற விண்ணப்பப்படிவம்.
10. சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு கண் கண்ணாடி வாங்குவதற்கு உதவித்தொகை கோரும் விண்ணப்பப்படிவம்.
11. சீர்மரபினர் வாரியத்தில் பதிவு பெற்ற சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த உறுப்பினரின் ஓய்வூதியம் கோரும் விண்ணப்பப்படிவம்.
12. சீர்மரபினர் வாரியத்தில் பதிவு பெற்ற சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த உறுப்பினரின் முடக்க ஓய்வூதியம் கோரும் விண்ணப்பப்படிவம்.

# படிவம் I

## சீர்மரபினர் நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம்.

பதிவு எண். -------------
( அலுவலகத்தில் பூர்த்தி செய்யப்படும்)

1) உறுப்பினரின் பெயர் ,

2) தந்தை / கணவர் பெயர் ,

3) விண்ணப்பதாரரின் பிறந்த தேதி நாள் மாதம் ஆண்டு
(வயதிற்கு ஆதாரமாகச் சான்றிதழ் இணைக்கப்படவேண்டும்.)

4) திருமண நிலை
( திருமணம் ஆனவரா ? இல்லையா ? விதவை / மனைவியை இழந்தவர் ) ,

5) நிரந்தர முகவரி ,

6) தற்போதைய முகவரி ,

7) சுயதொழிலா ? அல்லது தனிநபரின் கூலித் தொழிலாளரா ?

8) வேலையிலிருப்பின், தொழில் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி மற்றும் வேலை கொடுப்பவர் / ஒப்பந்ததாரரின் பெயர் ,

9) வேலையின் தன்மை ,

10) விண்ணப்பிக்கும் நாளில் எத்தனை ஆண்டுகள் சம்பந்தப்பட்ட வேலையிலிருந்து வருகிறார் ,

11) குடும்ப உறுப்பினர்களின் விவரம்

| வ. எண் | பெயர் | வயது | உறவு | குடும்ப உறுப்பினர் படித்துக் கொண்டிருப்பவரானால் தற்போது படிக்கும் வகுப்பு | திருமணநிலை |
|---|---|---|---|---|---|
| | | | | | |

12) மனைவி / கணவர் வேலையிலிருப்பவரா
அவ்வாறாயின், வேலை விவரங்கள் ,

13) நியமனம் ( பெயர் குறிப்பீடு )

| நியமிக்கப்பட்டவர் / ஆண் பெயர் மற்றும் முகவரி (1) | நியமிக்கப்பட்டவர் / ஆண் தொழிலாளிக்கு என்ன உறவுமுறை (2) | நியமிக்கப்பட்டவரின் வயது (3) | நியமிக்கப்பட்டவர் ஒவ்வொரு வருக்கும் வழங்கப்பட வேண்டியத் தொகை (4) |
|---|---|---|---|
| | | | |

14. வேறு ஏதேனும் வாரியத்தில் உறுப்பினர் உள்ளாராயின்
அவ்வாரியத்தின் பெயர் மற்றும் உறுப்பினர் எண் ,

தொழிலாளரின் கையொப்பம் அல்லது
இடது கை பெருவிரல் ரேகை

<u>சான்றிதழ்</u>

தொழிலாளியின் விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் நான் அறிந்த வரையும் நம்பியதன் படியும் உண்மை எனச் சான்றிடப்படுகின்றன.

இடம்.
தேதி.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம)
சிறுபான்மையினர் நல அலுவலர்.

மனுதாரரை சீர்மரபினர் வாரிய உறுப்பினராக சேர்க்க ஒப்புதல் வழங்கப்படுகிறது.

உறுப்பினர் அடையாளஅட்டை எண் :

உறுப்பினர் – செயலர்
சீர்மரபினர் நல வாரியம்.

**<u>படிவம் II</u>**

அடையாள அட்டை

தமிழ் நாடு சீர்மரபினர் நல வாரியம்

# சீர்மரபினர் நல வாரியத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்

1 .விபத்து ஈட்டுறுதித்திட்டத்தின் கீழ்

| | | |
|---|---|---|
| அ . விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை | – | ரூ. 1,00,000 |
| ஆ. விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | – | ரூ.10,000 முதல் ரூ.1,00,000 வரை |
| 2. இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை | – | ரூ. 15,000 |
| 3. ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை | – | ரூ.2,000 |

4. கல்வி உதவித்தொகை

| | | |
|---|---|---|
| அ. 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | – | ரூ. 1000 |
| ஆ, 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | – | ரூ.1000 |
| இ. 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | – | ரூ.1000 |
| ஈ. 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | – | ரூ.1500 |
| உ. 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | – | ரூ.1500 |
| ஊ. முறையான பட்டப்படிப்புக்கு | – | ரூ.1500 |
| மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்புக்கு | – | ரூ.1750 |
| எ. முறையான பட்ட மேற்படிப்புக்கு | – | ரூ.2000 |
| மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு | – | ரூ.3000 |
| ஏ. தொழிற்கல்வி பட்ட படிப்புக்கு | – | ரூ.2000 |
| மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட படிப்பு | – | ரூ.4000 |
| ஐ. தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு | – | ரூ 4000 |
| மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு | – | ரூ.6000 |
| ஒ. ஐ,.டி.ஐ. அல்லது தொழிறூபயிற்சி படிப்புக்கு | – | ரூ.1000 |
| மாணவர் இல்ல வசதியுடன் ஐடிஐ அல்லது பல்தொழில் பயிற்சி படிப்புக்கு | – | ரூ.1200 |
| 5. திருமண உதவித்தொகை | – | ரூ.2000 |
| 6. மகப்பேறு உதவித்தொகை | | |
| அ. மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் | – | ரூ.6000 |
| ஆ. கருச்சிதைவு/கருக்கலைப்பு | – | ரூ.3000 |
| 7. மூக்குக்கண்ணாடி செலவுத்தொகையை ஈடு செய்தல் | – | ரூ.500 வரை |
| 8. முதியோர் ஒய்வூதியம் மாதந்தோறும் | – | ரூ.400 |

# அடையாள அட்டை

## தமிழ் நாடு சீர்மரபினர் நல வாரியம்

பதிவு எண் ,
நாள் ,

1) பெயர் ,
2) தந்தை / கணவன் ,

3) பிறந்த தேதி / வயது ,

4) வேலை விவரங்கள் ,

-----க்குள் பதிவு
புதுப்பிக்கப்பட வேண்டும்

5. நிரந்தர முகவரி :

6. தற்போதைய முகவரி :

7. திருமண நிலை :

8. நியமிக்கப்பட்டவர்களின்
விவரங்கள் (Nominees) :

9. தொழிற்சங்கத்தில் உறுப்பினராக
இருப்பின் பதிவு எண் :

தொழிலாளியின்
கையொப்பம்

அலுவலரின்
கையொப்பம்

# பொதுவான அறிவுரைகள்

1. உறுப்பினராகப் பதிவு செய்யும் நபர் 18 வயது பூர்த்தி இருக்க வேண்டிய 60 வயதுக்குள் இருக்கவேண்டும்.
2. பதிவு / புதுப்பித்தல் கட்டணம் <u>ஏதுமில்லை</u>
3. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டும்.
4. அடையாள அட்டையை இழந்திருந்தால், சம்பந்தப்பட்ட அலுவலரிடம் ரூ. 20/– செலுத்தி நகல் அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. இருப்பிடம் மாறினால், புதிய முகவரியை வாரியத்திற்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.
6. உறுப்பினர் தொழிலாளி திருமணமானபின் மூலப் பதிவு விண்ணப்பப் படிவத்தில் நியமிக்கப்பட்டவர் பெயரை மாற்றுவதற்கு வாரியத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.
7. தொழிலாளி இறப்பின், இயற்கை இறப்பு நிதியுதவிகான விண்ணப்பப் படிவத்துடன் மூல அடையாள அட்டையை வாரியத்திடம் சரணடைப்பு செய்யவேண்டும்.
8. ஒவ்வொரு முறையும் நல நிதியுதவி கோரும் விண்ணப்பத்துடன் அசல் அடையாள அட்டையை இணைக்க வேண்டும்.

உழைப்போம்
உயர்வோம்

GOVERNMENT OF TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS

## சீர்மரபினர் நல வாரியத்தின் மூலம் வழங்கப்பட்ட நல உதவி

| வ. எண் (1) | நல உதவியின் பெயர் (2) | பயனாளியின் பெயர் (3) | கோப்பு எண். மற்றும் தேதி. (4) | பட்டுவாடா செய்யப்பட்ட தொகை (5) | அலுவலரின் கையொப்பம் (6) |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**உறுப்பினர் புதுப்பித்தல் விவரம்**

| புதுப்பித்தல் தேதி. | ரசீது எண் மற்றும் தேதி. | அடுத்து புதுப்பிக்கும் நபர் | புதுப்பிக்கும் அலுவலரின் கையொப்பம் |
|---|---|---|---|
| | | | |

**<u>சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர் விபத்தினால் இறப்பு அல்லது ஊனம் ஏற்படின் ஊனத்தின் தன்மைக்கேற்ப உதவித் தொகை கேட்பு விண்ணப்பப்படிவம்</u>**

பெறுநர்

1. பாதிக்கப்பட்டவர் பெயர் :
   விலாசம்

   வயது :

   தொழில் :

2. வேலை நடைபெற்ற இடத்தின் பெயர் :

   இடம் :

   தாலுகா :

   மாவட்டம் :

3. மனுதாரர் பெயர் :

4. காப்பீடுத் திட்டத்தின் பதிவு பெற்றவருடன் உறவு :

5. பதிவு செய்த உறுப்பினரா? அல்லது வாரிசுதாரா? :

6. விபத்து நடந்த நாள் மற்றும் நேரம் :

7. விபத்து நடந்த இடம் :

   (அ) வேலை இடத்தில் :

   (ஆ) வேலை இடத்திற்கு வெளியே :

8. விபத்தின் காரணமாக மரணம் நேரிட்டதா? :

9. மரணம் நேரிட்ட நாள் மற்றும் நேரம் :

( திட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணவங்களுடன்)

இடம்:
நாள்:

கையொப்பம்
உறுப்பினர் / நியமனதாரர்

## <u>சீர்மரபினர் இனத்தை சார்ந்த நல வாரிய உறுப்பினர்</u>
## இயற்கை மரணம் / ஈமச்சடங்கு உதவித் தொகை பெற விண்ணப்பம் படிவம்

பெறுநர்

1. பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினரின் பெயர் :

2. முகவரி :

PIN :

3. வயது :

4. வேலையின் தன்மை :

5. பதிவு எண் & தேதி ( அடையாள அட்டை இணைக்கப்பட்ட வேண்டும்) :

6. அ) இறந்த இடம் ( இறப்புச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) :
   ஆ) இறந்த தேதி :
   இ) மரணத்திற்கான காரணம் :

7. அ) விண்ணப்பதாரரின் பெயர் :
   ஆ) விண்ணப்பதாரரின் வயது :
   இ) விண்ணப்பதாரரின் முகவரி :

   ஈ) விண்ணப்பதாரர் இறந்த பதிவு பெற்ற தொழிலாளியின் நியமனதாரா:

   உ) விண்ணப்பதாரருடன் இறந்த பதிவு பெற்ற அமைப்பு சாரா தொழிலாளிக்கு உறவு முறை :

இடம்: **உரிமை கோருபவரின் கையொப்பம்**
தேதி:

**மேலே அளிக்கப்பட்ட விவரங்கள் சரியானவை என சான்றளிக்கிறேன்.**

இடம்: கையொப்பம்
தேதி:

மனுதாரர் வசிக்கும் பகுதியை எல்லையாகக் கொண்ட பாராளுமன்ற அல்லது சட்டமன்ற பேரவை உறுப்பினர் அல்லது கிராம பஞ்சாயத்து தலைவர் அல்லது உள்ளாட்சி அமைப்பு உறுப்பினர் அல்லது கிராம நிர்வாக அலுவலர்.

<u>ஒப்பளிப்பு</u>

1) இறந்த பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினர் திரு / திருமதி / செல்வி....
ஈமச்சடங்கு செவிற்காக ரூ. 2,000/– ( ரூபாய் இரண்டாயிரம் மட்டும் ) ஐ இதன் மூலம் ஒப்பளிக்கிறேன்.

2) இறந்த பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினர் திரு/ திருமதி/ செல்வி
இயற்கை மரணத்திற்காக உதவி நிதி ரூ. 15,000/– ( ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) இதன் மூலம் ஒப்பளிக்கிறேன்.

இடம்:
நாள் :

உறுப்பினர் – செயலர்
சீர்மரபினர் நல வாரியம்

<u>பட்டுவாடா</u>

3) இறந்த பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினர் திரு / திருமதி / செல்வி
ஈமச்சடங்கு செவிற்காக ரூ. 2,000/– ( ரூபாய் இரண்டாயிரம் மட்டும் ) ஐ (காசோலை எண். நாள் ) இதன் மூலம் வழங்கப்பட்டது.

4) இறந்த பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினர் திரு/ திருமதி/ செல்வி
இயற்கை மரணத்திற்காக உதவி நிதி ரூ. 15,000/– ( ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும் ) (காசோலை எண். நாள் ) இதன் மூலம் வழங்கப்பட்டது.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்.

## சீர்மரபினர் இனத்தை சார்ந்த நல வாரிய உறுப்பினரின் மகன் / மகள் 10 ஆம் வகுப்பு / 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கு

### கல்வி உதவித் தொகை பெற விண்ணப்பம் படிவம்

1. பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினரின் பெயர் : ...............................................

2. பதிவு எண் ( அசல் அடையாள அட்டை இணைக்கப்பட வேண்டும்) : ...............................................

3. அ) நிரந்தர முகவரி : ...............................................
...............................................
PIN.............................................

ஆ) தற்போதைய முகவரி : ...............................................
...............................................
PIN.............................................

4. அ) நல வாரிய உறுப்பினரின் மகன்கள் அல்லது மகள்கள் பற்றிய விவரங்கள். : ...............................................

| வ. எண் | பெயர் | வயது |
|---|---|---|
| 1.<br>2. | | |

5. கல்வி உதவித் தொகை கோரப்படும் மகன் அல்லது மகள் பற்றிய விபரங்கள்:

| வ. எண் | பெயர் | பிறந்த தேதி | தேர்ச்சி பெற்ற தேர்வு | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|---|
| 1.<br>2. | | | | |

(அரசிதழ் அலுவலரால் சான்றளிக்கப்பட்ட மதிப்பெண்களின் ஊடுகதிர் நகல் இணைக்கப்பட வேண்டும்)

இடம்:
தேதி: உறுப்பினரின் கையொப்பம்

**சான்று**

**மேலே அளிக்கப்பட்ட விவரங்கள் வரியானவை என சான்றளிக்கிறேன்.**

இடம்:
தேதி: உறுப்பினரின் கையொப்பம்

# <u>ஒப்பளிப்பு</u>

உரிமை கோருபவருக்கு கல்வி உதவித் தொகை ரூ.................................(ரூபாய்............
..............................................................................மட்டும்) இதன் மூலம் ஒப்பளிக்கிறேன்.

இடம்:

தேதி:

உறுப்பினர் – செயலர்
சீர்மரபினர் நல வாரியம்

# <u>பட்டுவாடா</u>

உரிமை கோருபவருக்கு கல்வி உதவித் தொகை ரூ..................................................(ரூபாய்............
..............................................................................மட்டும்) (காசோலை எண்.
நாள் ) இதன் மூலம் வழங்கப்பட்டது.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்.

# கல்வி உதவித் தொகை பெறுவதற்கான விண்ணப்ப படிவம் பூர்த்தி செய்வதற்கான வழிமுறைகள்.

கலம் 1 :- பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினரின் பெயர் முழுவதுமாக எழுதப்பட வேண்டும்.

கலம் 2 :- வாரியத்தால் அளிக்கப்பட்ட பதிவு எண் குறிப்பிடப்பட வேண்டும். வாரிய அடையாள அட்டையின் ஊடுகதிர் நகல் ( ஜெராக்ஸ் நகல்) அத்தாட்சி பெற்று இணைக்கப்பட வேண்டும்.

கலம் 3 :- அ &ஆ நிரந்தர மற்றும் தற்போதைய முகவரிகள் குறிப்பிடப்பட வேண்டும் அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கும், விண்ணபத்தில் குறிப்பிடப்படும் முகவரிக்கும் மாறுதல் ஏதேனும் இருந்தால் அதற்கான காரணத்தை குறிப்பிடப்பட வேண்டும்.

கலம் 4 :- இம்மனுவினை அளிக்கும் நல வாரிய உறுப்பினரின் ஆதரவில் தற்போது உள்ள அனைத்து மகன்கள் / மகள்கள் ஆகியோரின் பெயர்/ வயது, திருமணம் ஆனவரா? திருமணம் ஆகாதவரா? என்ற விவரங்கள் அளிக்கப்பட வேண்டும்.

கலம் 5 :– மனு செய்து கொள்ளும் பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினரின் எந்த மகள் / மகன் தற்போது 10ம் வகுப்பு / 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளாரோ அந்த மகன்/மகள் பற்றிய விவரம் மட்டும் அளிக்கப்பட வேண்டும். மேலும் 10/12ம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கான மதிப்பெண் ஊடுகதிர் நகல் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரால் சான்று அளிக்கப்பட்டு மனுவுடன் இணைக்கப்படவேண்டும்.

<u>தொழிலாளரின் கையொப்பம்</u>

இவ்விடத்தில் மனு செய்துக் கொள்ளும் நல வாரிய உறுப்பினரால் கையொப்பம் இடப்பட வேண்டும். கையொப்பம் இடத் தெரியாத நல வாரிய உறுப்பினர் இடது கைபெருவிரல் ரேகையினை அவ்விடத்தில் பதிக்க வேண்டும். அதன் கீழ்..............................................என்பவரின் இடது கை பெருவிரல் ரேகை என குறிப்பிட வேண்டும். கையொப்பம்/ பெருவிரல் ரேகையுடன் அது எந்த தேதி இடப்படுகிறது என குறிப்பிட வேண்டும்.

<u>சான்று</u>

<u>கல்வி உதவித் தொகை பெறுவதற்கான நிபந்தனைகள்:-</u>

அ) கல்வி உதவித்தொகை விண்ணப்பத்தில் தலைமை ஆசிரியர் சான்று பெறப்பட வேண்டும்.

ஆ) வாரியத்தில் பதிவு செய்த தேதியிலிருந்து கல்வி உதவித்தொகை கோரும் தேதி வரை ஓராண்டு முடிந்திருக்க வேண்டும்.

இ) பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினரின் இரு பிள்ளைகளுக்கு மட்டும் இந்த உதவித்தொகை வழங்கப்படும்.

## சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த நல வாரிய உறுப்பினரின் மகன் 10 ஆம் வகுப்பு/ 11 ஆம் வகுப்பு / 12 ஆம் வகுப்பு பயிலுவதற்கு

### கல்வி உதவித் தொகை பெற விண்ணப்பம் படிவம்

1. பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினரின் பெயர் :

2. பதிவு எண். :
   ( அசல் அடையாள அட்டை இணைக்கப்பட வேண்டும் :

3. நிரந்தர முகவரி :

4. தற்போதைய முகவரி :

5. பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினரின் மகள் பற்றிய விவரம்.

| வ. எண் | பெயர் | வயது |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |

6. உதவித் தொகை கோரப்படும் மகள் அல்லது மகன் பற்றிய விவரங்கள்.

| வ. எண் | பெயர் | பிறந்த தேதி | படிக்கும் வகுப்பு | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |

(பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினரின் மகள் கல்வி பயிலும் பள்ளி தலைமை ஆசிரியர் / முதல்வரிடமிருந்து பயிலும் வகுப்பு மற்றும் கல்வி ஆண்டு குறித்து சான்றிதழ் பெற்று இணைக்கப்படவேண்டும்.

இடம்:
தேதி: பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினரின் கையொப்பம்

**சான்று**

மேலே அளிக்கப்பட்ட விவரங்கள் சரியானவை என சான்றளிக்ககிறேன்.

இடம்:
தேதி: பள்ளித் தலைமையாசிரியரின் கையொப்பம்

**ஒப்பளிப்பு**

உரிமை கோருபவருக்கு கல்வி உதவித் தொகை ரூ. 1,000/– ( ரூபாய் ஆயிரம் மட்டும்) / ரூ. 1,500/– ( ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு மட்டும்) இதன் மூலம் ஒப்பளிக்கிறேன்.

உறுப்பினர் – செயலர்
சீர்மரபினர் நல வாரியம்

பட்டுவாடா

உரிமை கோருபவருக்கு கல்வி உதவித் தொகை ரூ. 1,000/– ( ரூபாய் ஆயிரம் மட்டும்) / ரூ. 1,500/– ( ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு மட்டும்) ( காசோலை எண் நாள் ) இதன் மூலம் வழங்கப்பட்டது.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்.

**<u>சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த நல வாரிய உறுப்பினரின் மகன் / மகள் முறையான பட்டப்படிப்பு / பட்ட மேற்படிப்பு / தொழிற்கல்வி / தொழிற் கல்விபட்ட மேற்படிப்பு / ஐ.டி.ஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பிற்கு.</u>**

<u>கல்வி உதவித் தொகை பெற விண்ணப்பம் படிவம்</u>

1. பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினரின் பெயர் :

2. பதிவு எண் :
( அசல் அடையாள அட்டையின் அத்தாட்சியுடன் கூடிய ஊடுகதிர் நகல் இணைக்கப்பட வேண்டும்)

3. நிரந்தர முகவரி :

4. தற்போதைய முகவரி :

5. நல வாரிய உறுப்பினரின் குடும்ப உறுப்பினர்கள் பற்றிய விவரம்.

| வ. எண் | பெயர் | வயது |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |

6. உதவித் தொகை கோரப்படும் மகள் அல்லது மகன் பற்றிய விவரங்கள். :

| வ. எண் | பெயர் | பிறந்த தேதி | படிப்பின் பெயர் | படிப்பின் காலம் | கல்லூரி நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |

இடம்:
தேதி: பதிவு பெற்ற உறுப்பினரின் கையொப்பம்

<u>சான்று</u>

மேலே அளிக்கப்பட்ட விவரங்கள் சரியானவை என சான்றளிக்கிறேன்.

இடம்:
தேதி:

கல்வி நிறுவனத்தின்
முதல்வரின் கையொப்பம்

<u>ஒப்பளிப்பு</u>

உரிமை கோருபவருக்கு கல்வி உதவித் தொகை ரூ.................................................................
(ரூபாய்...............................................................மட்டும்) இதன் மூலம் ஒப்பளிக்கிறேன்.

உறுப்பினர் – செயலர்
சீர்மரபினர் நல வாரியம்

<u>பட்டுவாடா</u>

உரிமை கோருபவருக்கு கல்வி உதவித் தொகை ரூ..................................................................
(ரூபாய்..................................................................மட்டும்) ( காசோலை எண்                நாள்            )  இதன் மூலம் வழங்கப்பட்டது.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்.

## <u>சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த நல வாரிய உறுப்பினர்/உறுப்பினரின் குடும்ப உறுப்பினர்</u>

### <u>திருமண உதவித் தொகை பெற விண்ணப்பம் படிவம்</u>

1. நல வாரிய உறுப்பினரின் பெயர் : -----------------------------------------

2. பதிவு எண் ( அடையாள அட்டையின் ஊடுகதிர் நகல் இணைக்கப்பட வேண்டும். : -----------------------------------------

3. அ) நிரந்தர முகவரி : -----------------------------------------
-----------------------------------------

   ஆ) தற்போதைய முகவரி : -----------------------------------------
-----------------------------------------
-----------------------------------------

4. அ) நல வாரிய உறுப்பினரின் மகன் அல்லது மகள் பற்றிய விவரங்கள் : -----------------------------------------

இடம்:
தேதி: பதிவு பெற்ற வாரிய உறுப்பினரின் கையொப்பம்.

---

### <u>சான்று</u>

திரு/ திருமதி------------- -- - - - - - - - - - - - - - - - - - - - என்பவரது மகன்/ மகள்/ செல்வன்/ செல்வி- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -என்பவருக்கும் திரு./ திருமதி- - - - - - - - - - - - - - - - - - - -------------------------என்பவரது மகன்/மகள்/ செல்வன்/ செல்வி-------------------------------------என்பவருக்கும் ---------------------------அன்று---------- -----------------------இடத்தில் திருமணம் நடைபெறும் என சான்றளிக்கிறேன்.

இடம்:
நாள்: மனுதாரார் வசிக்கும் பகுதியை எல்லையாகக் கொண்ட பாராளுமன்ற அல்லது சட்டப் பேரவை உறுப்பினர் அல்லது கிராமப் பஞ்சாயத்து தலைவர் அல்லது உள்ளாட்சி அமைப்பு உறுப்பினர்/ கிராம நிர்வாக அலுவலர்.

### <u>ஒப்பளிப்பு</u>

உரிமை கோருபவருக்கு ரூ.----------------------(ரூபாய்-------------------------------------------- ------------------------மட்டும்—ஐ இதன் மூலம் ஒப்பளிக்கிறேன்.

இடம்:
தேதி:

உறுப்பினர் – செயலர்
சீர்மரபினர் நல வாரியம்

**<u>பட்டுவாடா</u>**

உரிமை கோருபவருக்கு ரூ.------------------------(ரூபாய்------------------------------------------------
------------------------மட்டும்—ஐ ( காசோலை எண் நாள் ) இதன் மூலம் வழங்கப்பட்டது.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்.

## திருமண உதவித் தொகை பெறுபவதற்கான விண்ணப்ப படிவம் பூர்த்தி செய்வதற்கான வழிமுறைகள்.

கலம் 1:- பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினரின் பெயர் முழுவதுமாக எழுதப்பட வேண்டும்.

கலம் 2:- வாரியத்தால் அளிக்கப்பட்ட பதிவு எண் குறிப்பிடப்பட வேண்டும். அடையாள அட்டையின் ஊடுகதிர் நகல் (ஜெராக்ஸ் நகல்) அத்தாட்சி பெற்று இணைக்கப்பட வேண்டும்.

கலம் 3:- அ &ஆ நிரந்தர மற்றும் தற்போதைய முகவரிகள் குறிப்பிடப்பட வேண்டும். அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கும், விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் முகவரிக்கும் மாறுதல் ஏதேனும் இருந்தால் அதற்கான காரணத்தை குறிப்பிட வேண்டும்.

கலம் 4:- அ) இம்மனுவினை அளிக்கும் நல வாரிய உறுப்பினரின் ஆதரவில் தற்போது உள்ள அனைத்து மகன்கள்/ மகள்கள் ஆகியோரின் பெயர் / வயது, திருமணம் ஆனவரா? திருமணம் ஆகாதவரா? என்ற விவரங்கள் அளிக்கப்பட வேண்டும்.

ஆ) மனு செய்து கொள்ளும் பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினரின் எந்த மகன் / மகள் திருமணத்திற்கான தற்போது உதவித் தொகை கோரப்படுகிறதோ அந்த மகன் / மகள் பெயர் மட்டும் குறிப்பிடப்பட வேண்டும். மேலும் திருமணம் நடைபெறம் தேதி, திருமணம் நடைபெறும் இடம் மற்றும் திருமணத் தம்பதியரின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

இ) இதற்கு முன்பு திருமண உதவித் தொகை பெற்றிருந்தால் எந்த மகன்/ மகள் என பெயர் குறிப்பிட்டு திருமண உதவித் தொகை பெறப்பட்ட விபரம் குறிப்பிடப்பட வேண்டும்.

நவ வாரிய உறுப்பினரின் கையொப்பம்:-

இவ்விடத்தில் மனு செய்துக் கொள்ளும் பதிவு பெற்ற உறுப்பினரால் கையொப்பம் இடப்பட வேண்டும். கையொப்பம் இடத் தெரியாத உறுப்பினர் இடது கை பெருவிரல் ரேகையினை அவ்விடத்தில் பதிக்க வேண்டும் அதன் கீழ்------------------------------------------ என்பவரின் இடப்படுகிறது என குறிப்பிடவேண்டும்.

**சான்று**

கீழ்க்கண்ட யாரேனும் ஒருநபரால் அவரது தகுதிக்கான ரப்பர் முத்திரையிட்டும் கையொப்பம் பெற்றும் அளிக்கப்ப வேண்டும்.

1. மனுதாரார் வசிக்கும் பகுதியை உள்ளடக்கிய எல்லை கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்.
2. சட்ட பேரவை உறுப்பினர்.
3. கிராம பஞ்சாயத்து தலைவர்.
4. உள்ளாட்சி அமைப்பு உறுப்பினர்.
5. கிராம நிர்வாக அலுவலர்.

குறிப்பு:- (1) இவர்கள் தவிர இதர எவரும் சான்றளித்தால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(2) சரியான விவரங்கள் பூர்த்தி செய்யப்படாவிட்டால் விண்ணப்பம் திருப்பி அனுப்பி வைக்கப் பட்டுவிடும் என அறியவும்.

**திருமண உதவித் தொகை பெறுவதற்கான நிபந்தனைகள்:-**

அ) விண்ணப்பதாரர் பதிவு பெற்ற தேதியிலிருந்து அவரது எந்த மகன்/ மகள் திருமணத்திற்கான திருமணத்திற்கான உதவித் தொகை கோருகிறாரோ அந்த தேதி வரை ஓராண்டு முடிவு பெற்றிருக்க வேண்டும்.

ஆ) பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினர் இந்த உதவித் தொகையை இரண்டு முறை மட்டுமே பெற இயலும்.

இ) பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினர் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை எதுவும் நிலுவையில் இருக்கக் கூடாது.

ஈ) பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினரின் எந்த மகன் / மகள் திருமணத்திற்காக இந்த உதவித் தொகை கோரப்படுகிறதோ அவர் திருமணம் செய்வதற்கு சட்டப்படியான வயது வரம்பை அடைந்திருக்க வேண்டும்.

## <u>சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு பெற்ற பெண் உறுப்பினர் குழந்தை பிறப்பு அல்லது கருசூசிதைவு / கருக்கலைப்பு ஆகியவற்றிற்கான உதவித்தொகை வழங்குவதற்கான விண்ணப்பம்</u>

1. பதிவு பெற்ற பெண் உறுப்பினரின் பெயர் :

2. பதிவு எண் & தேதி :
   ( அசல் அடையாள அட்டை இணைக்கப்படவேண்டும்)

3. அ) நிரந்தர முகவரி :

   ஆ) தற்போதைய முகவரி :

4. பதிவு பெற்ற உறுப்பினரின் :
   மகன் / மகள் பற்றி விவரங்கள்

| வ. எண் | பெயர் | இனம் | வயது |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |

5. உதவித் தொகை கோரப்படும் மகன் / மகள் பற்றி விவரங்கள் :
   ( பிறப்புச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்)

6. குறைப்பேறு அல்லது கருக்கலைப்பு செய்யப்பட்டிருந்தால் :
   பதிவு பெற்ற மருத்துவ அதிசாரியிடமிருந்து குறைப்பேறு அல்லது கருக்கலைப்பு குறித்த சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

7. லத்திட்ட உதவித் தொகையை :
   இதற்கு முன்னால் துய்க்கப்பட்டுள்ளதா? ஆம், எனில் அதன் விவரங்கள் அளிக்கப்பட வேண்டும்

பதிவுபெற்ற பெண்
உறுப்பினரின் கையொப்பம்

### <u>சான்றிதழ்</u>

மேலே அளிக்கப்பட்ட விவரங்கள் சரியானவை என இதன் மூலம் சான்றளிக்கிறேன்.

இடம்:
தேதி:

உறுப்பினரின் கையொப்பம்

## ஒப்பளிப்பு

பதிவு பெற்ற மேற்படி பெண் உறுப்பினருக்கு * பிரசவம் / குறைப்பேறு/ கருக்கலைப்பு கால உதவித் தொகை ரூ. 2,000/– ( ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) இதன் மூலம் ஒப்பளிக்கிறேன்.

இடம்:

தேதி:

உறுப்பினர் – செயலர்
சீர்மரபினர் நல வாரியம்

- தேவையில்லாதவற்றை அடித்து விடவும்

## பட்டுவாடா

பதிவு பெற்ற மேற்படி பெண் உறுப்பினருக்கு * பிரசவம் / குறைப்பேறு/ கருக்கலைப்பு கால உதவித் தொகை ரூ. 2,000/– ( ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) ( காசோலை எண்
நாள் ) இதன் மூலம் வழங்கப்பட்டது.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்

**சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு பெற்ற சீர்மரபினர் உறுப்பினருக்கு கண் கண்ணாடி வாங்குவதற்கு உதவித் தொகை கோரும்**

**விண்ணப்பப் படிவம்**

1. பதிவு பெற்ற நல வாரிய உறுப்பினரின் பெயர் :

2. பதிவு எண் ( அடையாள அட்டையின் சான்றளிக்கப்பட்ட ஜெராக்ஸ் நகலை இணைக்கவும்) :

3. அ) நிரந்தர முகவரி :

   ஆ) தற்போதைய முகவரி :

4. நல வாரிய உறுப்பினரின் பதிவு புதுப்பிக்கப்பட்டுள்ளதா? ஆம் எனில், புதுப்பிக்கப்பட்ட தேதி :

5. கண் மருத்துவரின் சான்று அசல் இணைக்கவும் :

6. கண் கண்ணாடி வாங்கிய இரசீதின் அசல் இணைக்கவும் :

பதிவு பெற்ற நல வாரிய
உறுப்பினரின் கையொப்பம்

**சான்றிதழ்**

மேற்சொன்ன விவரங்கள் சரியானவை என்று நான் இதனால் சான்றளிக்கிறேன்.

இடம்:
தேதி:

உறுப்பினரின் கையொப்பம்.

# <u>சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு பெற்ற சீர் மரபினர் இனத்தைச் சார்ந்த உறுப்பினர் முதியோர் ஒய்வூதியம் கோரும் விண்ணப்பம் படிவம்</u>

பெறுநர்
உறுப்பினர் செயலர்
சீர்மரபினர் நல வாரியம்,
சேப்பாக்கம்
சென்னை 600 005

| |
|---|
| கையொப்பமிட்ட பாஸ்போர்ட் அளவு நிழற்படம் |

ஐயா,

பொருள் ஒய்வூதியம் வழங்கக் கோரும் விண்ணப்பம்
-----

1. விண்ணப்பதாரரின் பெயர் :

2. ஒய்வூதியம் அனுப்பப்பட வேண்டிய முழுமையான முகவரி :
( அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்).

3. பதிவு எண் மற்றும் நாள்
( அசல் அடையாள அட்டை இணைக்கப்பட வேண்டும் :

4. விண்ணப்பதராரின் வயது மற்றும் 60 வயது பூர்த்தி :
செய்த நாள்.

5. வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினராக தொடர்ந்து
5 ஆண்டுகள் முடிவுற்ற நாள் :

6. பதிவு தவறாமல் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டுள்ளதா? :
ஆம் எனில் அதன் விவரம் அளிக்கவும்.

| வ. எண் | பண ரசீது எண் மற்றும் நாள் | தொகை ரூ. | பதிவு புதுப்பிக்கும் காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | வரை |
| | | | | |
| | | | | |

பதிவு மற்றும் கடைசியாக புதுப்பித்த அசல் ரசீது இணைப்பப்பட வேண்டும்.

7. வேறு ஏதேனும் ஒய்வூதியம் பெறுபவராக இருப்பின்
அதன் விவரம் அளிக்கவும் :

# உறுதிமொழி

மேலே கொடுக்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களும் உண்மையெனவும், நான் வேறு எந்த வாரியத்திலும் பதிவு பெற்ற தொழிலாளியாக/உறுப்பினராக இல்லை

அல்லது

நான் வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினராக உள்ளேன் எனவும்

நான் வேறு எந்த வாரியத்திலும் அதே உதவித்தொகை பெற விண்ணப்பிக்கவில்லை எனவும் வேறு எந்த வாரியத்திலும் இதே காரணத்திற்காக உதவி பெறவில்லை எனவும் இதன் மூலம் உறுதி கூறுகிறேன்.

இடம்:

விண்ணப்பதாரரின் கையொப்பம் /
கை பெருவிரல் ரேகை

நாள்:

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

குறிப்பு – 1. மேலே ஒட்டிய நிழற்படத்தைத் தவிர மற்றும் ஒரு நிழற்படம் விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பப்பட வேண்டும்.
2. விண்ணப்பதாரர் வேறு ஓய்வூதியம் எதுவும் பெறவில்லை என்பதற்கான கிராம நிர்வாக அலுவலரின் சான்று இணைக்கப்பட வேண்டும்.
3. முழுமையான விவரங்கள் அளிக்கப்படாத விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

( அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

ஒய்வூதியம் வழங்கக் கோரும் மனு ஆய்வு செய்யப்பட்டது. ஓய்வூதியம் வழங்க உறுப்பினர்– செயலருக்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலகம்.

ஒய்வூதியம் வழங்க ஆணை ( ஓ.வ. ஆ.) எண். நாள்:

2.........................................நாள் முதல் மாதம் ஒன்றுக்கு ஒய்வூதியம் ரூ. 400/– ( ரூபாய் நானூறு மட்டும் ) வழங்க இதன் மூலம் ஆணையிடப்படுகிறது. ஒய்வூதியத் தொகை பணவிடை மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

உறுப்பினர் – செயலர்
சீர்மரபினர் நல வாரியம்

பெறுநர்
செல்வி/ திரு/ திருமதி.....................................
............................................................................
............................................................................
............................................................................
PIN…......................................................................

## சீர்மரபினர்  வாரியத்தில் பதிவு பெற்ற சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த உறுப்பினரின்

**<u>முடக்க ஒய்வூதியத்திற்கான விண்ணப்பம்  படிவம்</u>**

பெறுநர்

| |
|---|
| கையொப்பமிடப்பட்ட பாஸ்போர்ட் அளவு நிழற்படம் |

ஐயா,

பொருள்:   ஒய்வூதியம் வழங்கக் கோரும் விண்ணப்பம்.

******

1. விண்ணப்பதாரரின் பெயர் :

2. ஒய்வூதியம் அனுப்பப்பட வேண்டிய முழுமையன முகவரி :
( அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)

3. வயது மற்றும் பிறந்த தேதி :

4. பதிவு எண் மற்றும் நாள் :
( அசல் அடையாள அட்டை இணைக்கப்பட வேண்டும்)

5. வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளியாக தொடர்ந்து 5 ஆண்டுகள் முடிவுற்ற நாள் :

6. பதிவு தவறாமல் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டுள்ளதா? :
ஆம் எனில் அதன் விவரம் அளிக்கவும்.

| வ. எண் | பண ரசீது எண். மற்றும் நாள். | தொகை ரூ. | பதிவு புதுப்பிக்கும் காலம் | |
|---|---|---|---|---|
| 1. | | | முதல் | வரை |
| 2. | | | | |
| 3. | | | | |

( பதிவு மற்றும் கடைசியாக புதுப்பித்த அசல் ரசீது இணைக்கப்பட வேண்டும்)

7. விண்ணப்பதாரர் நோயின் காரணமாக முடக்க முற்று இயல்பான :
பணிகளை செய்ய தகுதியற்ற உள்ளவரா? ஆம் எனில் நோயின்
விவரம் அளிக்கப்பட வேண்டும்.

8. நோயினால் ஏற்பட்ட முடக்கத்தின் தன்மை ( சிவில் சர்ஜன் பதவிக்குக் குறையாத மருத்துவ அலுவலர்களிடமிருந்து அவரது பெயர் மற்றும் முத்திரையுடன் கூடிய கையொப்பமிட்ட அசல் சான்றினைப் பெற்று இணைக்கப்பட வேண்டும். :

9. அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விவரம், சேர்ந்த நாள் மற்றும் விடுவிக்கப்பட்ட நாள் :

10. மேற்படி சிகிச்சைக்கான அரசிடமிருந்து மற்றும் நிறுவனத்திலிருந்து பயன்பெற்றிருப்பின் அதன் விவரம். :

## உறுதிமொழி

மேலே கொடுக்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களும் உண்மையெனவும், நான் வேறு எந்த வாரியத்திலும் பதிவு பெற்ற தொழிலாளியாக/ உறுப்பினராக இல்லை

அல்லது

நான் வேறு எந்த வாரியத்திலும் இதே உதவிதொகை பெற விண்ணப்பிக்கவில்லை எனவும் வேறு எந்த வாரியத்திலும் அதே காரணத்திற்காக உதவி பெறவில்லை எனவும் இதன் மூலம் உறுதி அளிக்கிறேன்.

இடம்:

நாள்: கையொப்பம்/ இடது கை பெருவிரல் ரேகை

பெயர்:

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

குறிப்பு – 1. மேலே ஒட்டிய நிழற்படத்தைத் தவிர மற்றும் ஒரு நிழற்படம் விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பப்பட வேண்டும்.

2. விண்ணப்பதாரர் வேறு ஒய்வூதியம் எதுவும் பெறவில்லை என்பதற்கான கிராம நிர்வாக அலுவலரின் சான்று இணைக்கப்பட வேண்டும்.

3. முழுமையான விவரங்கள் அளிக்கப்படாத விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

( அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

முடக்க ஒய்வூதியம் வழங்கக் கோரும் மனு ஆய்வு செய்யப்பட்டது. முடக்க ஓய்வூதியம் வழங்க உறுப்பினர்–செயலருக்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்.

முடக்க ஒய்வூதியம் வழங்கு ஆணை ( மு.ஒ.வ.ஆ) எண். நாள்:

ஆய்வு செய்யப்பட்டது.

1. ..............................................நாள் முதல் மாதம் ஒன்றுக்கு முடக்க ஒய்வூதியம் ரூ. 400/– ( ரூபாய் நானூறு மட்டும்) வழங்க இதன் மூலம் ஆணையிடப்படுகிறது. ஒய்வூதியத் தொகை பணவிடை மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

பெறுநர்
செல்வி/ திரு/ திருமதி ............................................

உறுப்பினர்–செயலர்
சீர்மரபினர் நல வாரியம்.

# <u>சீர்மரபினர் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்</u>

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

பதிவு எண்.
( அலுவலகத்தில் பூர்த்தி செய்வதற்காக)

1. தொழிலாளியின் பெயர் :

2. வயது மற்றும் பிறந்த தேதி :

3. தகப்பனார் / கணவர் பெயர் :

4. திருமண நிலை
   திருமணம் ஆனவரா / ஆகாதவரா
   கணவன் / மனைவியை இழந்தவரா :

5. நிரந்தர முகவரி : Pin Code:

6. தற்போதைய முகவரி :

7. ஏதேனும் ஒரு தொழிற்சங்கத்தில்
   உறுப்பினரா? ஆம், எனில்
   தொழிற்சங்கத்தின் பெயர் :

8. சாதாரணமாக தொழிலாளர் பணிக்கு
   செல்கிற இடங்களும் அவை
   அமைந்துள்ள பகுதிகள் குறித்த விவரமும்:

9. தொழிலின் தன்மை மற்றும் பணித்திறன் :

இடம்:
தேதி: விண்ணப்பதாரரின் கையொப்பம்

## <u>சான்று</u>

திரு. / திருமதி ...........................................................................................................................................
சீர்மரபினர் நல வாரியத்தின் திட்டங்களின் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒரு அமைப்பு சாரா தொழிலாளி என்றும் இதன் மூலம் சான்றளிக்கப்படுகிறது.

இடம்:

நாள்:

அங்கீகாரம் அளிக்கப்பட்டவரின்
கையொப்பம்

**<u>முக்கிய அறிவிப்பு</u>**

**பதிவு செய்த நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்க ஒரு முறை பதிவினை புதுப்பிக்க வேண்டும் பதிவை புதுப்பிக்கத் தவறினால் நலத்திட்ட உதவிகள் கிடைக்காது**

******